**செய்தி வெளியீடு எண்: 273** **நாள்: 16.04.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸின் தாக்குதலை சமாளிக்க எடுத்த பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றாக அனைத்துக் கல்லூரிகளுக்கும் 17.03.2020 முதல் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக மாணவர்களுக்கான செமஸ்டர் தேர்வுகள் இன்னும் நடத்தப்படவில்லை. கல்லூரி மாணவர்கள் தமிழ்நாட்டைத் தவிர வேறு மாநிலங்களிலிருந்தும் அயல் நாட்டிலிருந்தும் வந்து இங்கு கல்வி பயில்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு அனைத்து செமஸ்டர் தேர்வுகளும் மீண்டும் கல்லூரிகள் துவங்கும் அடுத்த பருவம் / செமஸ்டரின் துவக்கத்தில் தேர்வுகள் நடத்தப்படும். கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்கள் மீண்டும் திறப்பதற்கான தேதி அரசால் பின்னர் அறிவிக்கப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**